செ.வெ.எண்:31 நாள்: 21.10.2020

நாகப்பட்டினம் மாவட்டம்

**செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரவீன்.பி.நாயர்,இ.ஆ.ப அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரவீன்.பி.நாயர்,இ.ஆ.ப., அவர்கள் இன்று(21.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். சிறப்பு அலுவலர் (மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கம்) திருமதி.இரா.லலிதா,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) திரு.எம்.எஸ்.பிரசாந்த்,இ.ஆ.ப ஆகியோர் உடனிருந்தனர்.

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், அரசூர் ஊராட்சிக்குட்பட்ட வதிஸ்டாச்சேரி கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், ரூ.25 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி மற்றும் குடிநீர்க் குழாய் விரிவாக்கத்துடன் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகளையும்,

செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருவிளையாட்டம் ஊராட்சிக்குட்பட்ட பெருமூலை கிராமத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், ரூ.18 லட்சத்து 87 ஆயிரம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி மற்றும் குடிநீர்க் குழாய் விரிவாக்கத்துடன் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகளையும்,

செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், இலுப்பூர் ஊராட்சிக்குட்பட்ட முனிவேலங்குடி கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், ரூ.41 லட்சத்து 26 ஆயிரம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி மற்றும் குடிநீர்க் குழாய் விரிவாக்கத்துடன் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகளையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது செயற்பொறியாளர் திரு.செல்வராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.தியாகராஜன், உதவிப் பொறியாளர்கள் திரு.தியாகு, திரு.சோமசுந்தரம் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**